**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 02-ம் தேதி மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நி.வே.இ.ம.எண். 2/2023 இல் நி.வே.ம.எண்.154/2006

ம.சா.1 தாமோதரன்

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

நீதிமன்றத்திலிருந்து என்னையும், என் சகோதரர் சிவானந்தத்தையும் கைது செய்வதற்காக வந்தார்களா என்றால் இல்லை. 30.10.2009ம் தேதியன்று திரு.ஜகநாதன், வழக்குரைஞருக்கு வக்காலத்து கொடுத்து வழக்கின் விவரங்களை தெரிந்து கொண்டேன். என்னுடைய பிரமாணப்பத்திரிக்கையில் பத்தி 5ல் நான் 50 சதவீதம், என் சகோதரர் 50 சதவீதம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்று தீர்ப்புரையில் எங்கும் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிளாட்டினம் டிரேடு சென்டர் பிரைவேட் லிமிடில் எனக்கும் எனது சகோதரருக்கும் 50 சதவீதம் பங்கு உள்ளதா என்றால் இல்லை. ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் தற்போது பிளாட்டினம் டிரேடு சென்டர் பிரைவேட் லிமிடின் உரிமையாளர் நான் தான் என்று சொன்னால் சரிதான். தற்போது அ.வ.எண்.885/1993ல் குறிப்பிடப்பட்ட தீர்ப்பாணையின்படி என்னுடைய நிறுவனம் தான் முழுத்தொகையை நான் தான் செலுத்த வேண்டும் என்று கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் பிளாட்டினம் டிரேடு சென்டர் பிரைவேட் லிமிட் நிறுவனமாக பெயர் மாறும்போதும் யார் உரிமையாளர் என்றால் நான் தான் உரிமையாளர் ஆவேன். ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் எந்த ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் 2012 ஆகும். நானும், என்னுடைய சகோதரரும் சேர்ந்து கொண்டு மனுதாரரை ஏமாற்றுவதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவிற்காக 1ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும் ஒன்று சேர்ந்து கொண்டு பொய்யாக வழக்கு நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் என்ன எதிருரை

தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு தெரியும். அந்த எதிருரையில் 1ம் எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்துள்ள உத்தரவில் அதன்பேரில் மனு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. என் சகோதரர் தாக்கல் செய்த CRP.No.4141/2009 பிறப்பித்த உத்தரவின்பேரில் நான் மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இந்த மனுவில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுவினை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் உரிய நேரத்தில் தாக்கல் செய்துள்ளேன். உரிய காலத்தில் மனுதாக்கல் செய்யாததால் அது தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு தெரியாமலேயே E.A No.1/2022 அனுமதிக்கப்பட்டது சட்டவிரோதம் மற்றும் உரிமையியல் நடைமுறை சட்டத்திற்கு எதிரானது என்று பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**